தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பங்குனி 23, ஸ்ரீமுக — திருவள்ளுவர் ஆண்டு 2025

1994 ஏப்ரல் 6, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல் "

ஒருவர் தன் குடிமக்களை உயர்த்தும்பொருட்டு, தான் மேற்கொண்டுள்ள முயற்சியைச் செய்து முடிக்காமல் பின்வாங்க மாட்டேன் என்னும் மன உறுதி போன்ற பெருமை மிக்க சிறப்பு வேறு எதுவும் இல்லை.

1. வினாக்கள் — விடைகள்.

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள். வினா எண் 201. டாக்டர் எஸ். சுந்தரராஜ். மாண்புமிகு நிதி அமைச்சர்.

201—

பரமக்குடியில் இராமலிங்க விலாஸ் ஆரம்பப்பள்ளியில் வாக்குச்சாவடி அமைத்தல்

** 20402—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :*

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமக்குடி நகராட்சி வார்டு எண் 19, 21 ஆகியவற்றிற்கான வாக்குச்சாவடிகள் ஆயிரவைசிய மேல்நிலைப் பள்ளி, கீழமுஸ்லீம் மேனிலைப் பள்ளிகளில் அமைக்கப்படுவதை மாற்றி இராமலிங்க விலாஸ் ஆரம்பப் பள்ளியில் அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 'இல்லை' என்று பதில் கூறி இருக்கிறார்கள். கடந்த ஆண்டு வட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடந்த

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வாக்குச்சாவடிகள் மாற்றியமைக்கும் கூட்டத்தில்--பரமக்குடி நகராட்சியில் கிட்டத்தட்ட 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்கள் இருப்பதன் காரணமாகவும். அதுவும் இந்த 19 மற்றும் 21-வது வார்டுகள் நகரின் மத்தியில் அமைந்துள்ளதாலும், ஆயிரவைசிய மேல்நிலைப் பள்ளியில் 4 ஆண்கள் வாக்குச்சாவடிகளும், 4 பெண்கள் வாக்குச்சாவடிகளும் அமைந்திருக்கின்றன. கீழமுஸ்லீம் மேனிலைப் பள்ளிகளில் 3 ஆண்கள் வாக்குச்சாவடிகளும். 4 பெண்கள் வாக்குச்சாவடிகளும் உள்ளன. அங்கே அதிகமாகக் கூட்டம் வருவதால் அங்கே கோட்ட ஆட்சியர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்டு இரண்டிற்கும் நடுவில் இருக்கின்ற அந்த இராமலிங்க விலாஸ் ஆரம்பப் பள்ளியில் மாற்றி அமைப்பதற்காக உத்தரவிட்டார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் பரிசீலனை செய்து, வர இருக்கின்ற தேர்தல்களில் மக்கள் சுதந்திரமாக வாக்களிக்கும் பொருட்டு அங்கே இராமலிங்க விலாஸ் ஆரம்பப் பள்ளியில் மாற்றியமைக்க உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம், 200 – பரமக்குடி தனி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பரமக்குடி நகராட்சி வார்டு எண் 19, எண் 21 ஆகியவற்றுக்கான வாக்குச்சாவடிகள் ஆயிரவைசிய மேல்நிலைப் பள்ளி, கீழமுஸ்லீம் மேல்நிலைப் பள்ளிகளில் அமைக்கப்படுவதை மாற்றி இராமலிங்க விலாஸ் ஆரம்பப் பள்ளியில் அமைப்பதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. உறுப்பினர் குறிப்பிடுவதைப் போன்று வார்டு எண் 19, 21 ஆகியவற்றுக்கான வாக்குச்சாவடிகள் ஆயிரவைசிய மேல்நிலைப் பள்ளி, கீழமுஸ்லீம் மேல்நிலைப் பள்ளிகளில் அமைக்கப்படவில்லை. மாறாக வார்டு எண் 19-க்குத் தொடர்புடைய வாக்குச்சாவடிகள் ஹைராத்துல் அலியா மேலமுஸ்லீம் நடுநிலைப் பள்ளியிலும், வார்டு எண் 21-க்குத் தொடர்புடைய வாக்குச் சாவடிகள் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியிலேயும் அமைக்கப்பட்டுள்ளன. உறுப்பினர் குறிப்பிட்டுள்ள இராமலிங்க விலாஸ் ஆரம்பப் பள்ளி வார்டு எண் 31-ல் அமைந்துள்ளது. மேற்படி நகராட்சி வார்டுகள் 19, 21-ல் வசிக்கும் வாக்காளர்களுக்குரிய வாக்குச்சாவடிகள் அந்தந்த வார்டின் மத்தியப் பகுதியில் அமைந்துள்ளதாலும், இவ்வாக்குச்சாவடிகளை மாற்றவேண்டிய அவசியம் இல்லை. தற்போதுள்ள வாக்குச்சாவடிகள் வாக்காளர்களுக்கு வசதியாகவே இருந்து வருகிறது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வார்டுகள் புதிதாக அமைக்கப்படுவதன் காரணமாக தற்போதுள்ள வார்டுகள் மாற்றப்பட்டிருக்கின்றன என அறிகிறேன். கீழமுஸ்லீம் மேல்நிலைப் பள்ளியில் 8 வாக்குச் சாவடிகளில் பெண்களுக்காக இருக்கின்ற 4 வாக்குச்சாவடிகளை இராமலிங்க விலாஸ் ஆரம்பப்

பள்ளியில் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா, நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி வார்டு 19, 21 பற்றிய வாக்குச்சாவடிகள். அவை ஆயிரவைசிய மேல்நிலைப் பள்ளி, கீழமுஸ்லீம் மேல் நிலைப் பள்ளிகளிலே அமைக்கப்படவில்லை. அவை ஹைராத்துல் அலியா மேலமுஸ்லீம் நடுநிலைப் பள்ளியில் வார்டு 21 தொடர்புடைய வாக்குசாவடிகள் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே 31-வது வார்டுக்குத் தள்ளுவது என்பது அந்தந்த வாக்காளர்களுக்கு இருக்கின்ற பகுதியை விட்டு வேறு பகுதிக்குத் தள்ளுவதாகும். ஆனால் இதிலே வேறு பல மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென்றால் முறைப்படி மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவித்து, அவர் முறைப்படி அறிவித்து, இங்கே இருக்கின்ற தேர்தல் மாநில அமைப்பு அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். அந்த அளவுக்கு முயற்சி செய்வார்களானால் மீண்டும் பரிசீலிக்கலாம்.

முற்பகல் 10.05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஓட்டுச் சாவடிகள் என்பது ஒரே ஊரிலே 700, 800 ஓட்டர்கள் இருந்தால் அந்தப் பள்ளியிலே ஆண்களுக்கு, பெண்களுக்கு என்று தனித் தனியாக ஓட்டுப் போட அனுமதிக்கிறார்கள். அதிலே 500 பேர்களை மாத்திரம் ஓட்டுப் போட அனுமதி வழங்கிவிட்டு பிறகு பாக்கி பேரை 3 கிலோமீட்டருக்கு அந்தப் பக்கம் உள்ள ஒரு பள்ளிக்கு அனுப்புவார்களானால் அது நன்றாக இல்லை. அதற்கு இடையிலே 4 பர்லாங்குக்கு உள்ளே பள்ளி இருந்தால் அதிலே போடுவதில்லை. இப்படிப்பட்ட இடங்கள், எங்கெங்கு தமிழகத்திலே தூரமாக இருக்கின்றனவோ அதை எல்லாம் மாற்றி, பக்கத்திலே ஒரு கிலோமீட்டருக்கு உள்ளேயே இந்த ஓட்டர்கள் சென்று ஓட்டு அளிப்பதற்கான வாக்குச் சாவடிகளை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கும் கிட்டத்தட்ட 700 வாக்காளர்கள் இருக்கத்தக்க அளவுக்கு அமைய வேண்டும் என்பது நியதி. அதிலே ஆண்கள், பெண்கள் என்று வருமானால் அதற்கு ஏற்றப்படி இரண்டோ அல்லது மூன்றோ அல்லது நான்கோ அமைக்கின்ற சூழ்நிலை வரும். வாக்காளர்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோ அந்தப் பகுதியிலேயே கூடுமானவரையில் வாக்குச் சாவடி அமைய வேண்டும் என்றும் அவர்கள் அதிகத் தொலைவு நடந்து

சென்று வாக்களிக்க வேண்டிய அவசியம் ஏற்படாத அளவுக்கு இடங்கள் அமைய வேண்டும் என்றும் கூறப்படுகிறது. அவர்கள் சிலபல இடங்களில் குறிப்பிட்ட பள்ளிகளில், குறிப்பிட்ட கட்டிடங்களில் இருக்க வேண்டுமென்று சொல்லுகின்றபொழுது, தனித் தனி குடிசைவாழ் பகுதிகளாக இருந்தால் அங்கிருந்து இங்கு வரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, தொலைவைக் குறைக்க வேண்டும் என்பதும், வாக்காளர்களுக்கு அருகிலே அமைய வேண்டும் என்பதும், ஆகவே ஒவ்வொரு வாக்குச்சாவடிக்கான வாக்காளர்கள் கிட்டத்தட்ட 700-க்கு மேற்படாமல் கூடுமானவரை பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தை வைத்து தான் இவைகள் முடிவு செய்யப்படுகின்றன. அப்படி இடர்பாடுகள் எங்காவது இருக்குமேயானால், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து. அவர் ஆராய்ந்து பார்த்து. அதனை மாற்றி அமைப்பதன் மூலம் வாக்காளர்களுக்குப் பலன் ஏற்படும் என்று கருதுவார்களேயானால் அதை அவர்கள் அரசுக்கு சிபாரிசு செய்யலாம். அதற்கு மேல் நடவடிக்கை எடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 202. திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன்; மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

202—

மணல்மேடு பேரூராட்சி அரசு மருத்துவமனையில் பெண் மருத்துவர்கள் நியமனம்.

** 16771—திரு. எம். எம். எஸ். அபுல்ஹசன் :*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறையில் மணல்மேடு பேரூராட்சி அரசு மருத்துவமனையில் கடந்த ஐந்து வருடங்களாகப் பெண் மருத்துவர்கள் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், பெண் மருத்துவர்களை நியமனம் செய்ய அரசு உடன் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): போதிய பெண் மருத்துவர்கள் இல்லாத காரணத்தால் பெண் மருத்துவரை நியமிக்கும் வாய்ப்பு இல்லாமல் இருந்தது. இருப்பினும் இப்போது இந்த மருத்துவமனைக்கு அருகாமையிலே இருக்கிற ஆரம்பச் சுகாதார நிலையமான நல்லூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் இரண்டு பெண் மருத்துவர்கள் இருக்கிற காரணத்தால் ஒருவரை அங்கே இருந்து மாற்றியமைக்கலாம் என்று நேற்றைக்கு உரிய அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.